# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய்வது ஏற்புடையதல்ல




## காங்கிரஸ் வலியுறுத்து

முன்னாள்பிரதமர்ராஜீவ்காந்திகொலை வழக்கு குற்றவாளிகளை அரசியல் காரணங்களுக்காக விடுதலை செய்யக் கோருகின்றமை ஏற்புடையதல்ல என காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் குழு தலைவர் கே.எஸ்.அழகிரி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது –

ஏழு பேரை விடுவித்தால் சிறைச்சாலைகளில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கும் அனைத்து தமிழ் கொலைக் குற்றவாளிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுவதற்கு வாய்ப்பு உள்ளது.

மேலும் கொலை, குற்றம் செய்தவர்களை குற்றவாளிகளாகத்தான் கருத வேண்டுமே தவிர, அவர்களை தமிழர்கள் என்று அழைப்பது சரியல்ல.

கொலை குற்றவாளிகளை விடுவிக்க வேண்டும் என்று ஓர் இயக்கம் ஆரம்பித்தால், தமிழகத்தில் பொலிஸ் நிலையங்கள் வேண்டாம், நீதிமன்றங்கள் வேண்டாம், சட்டம் ஒழுங்கைப் பற்றி பேச வேண்டாம் என்று அர்த்தம்.– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# திருப்பதி மலைப் பாதையில் மின்சார பஸ் சோதனை ஓட்டம்!




திருமலை மலைப்பாதையில் மின்சார பஸ்ஸை இயக்கி தேவஸ்தான நிர்வாகம் சோதனை ஓட்டம் நடத்தி வருகின்றது.

ஆந்திர மாநிலம் – திருப்பதி திருமலையில், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதைத் தடுப்பதற்கு மின்சார பஸ்களை இயக்க, தேவஸ்தான நிர்வாகம் தீர்மானம் மேற்கொண்டது.

இதற்கமைய, ஆந்திர மாநிலசாலை போக்குவரத்து கழகம், திருமலைக்கு இயக்கப்படும் டீசல் பஸ்களை மின்சார பஸ்களாக மாற்றிப் பயன்படுத்தத் திட்டமிட்டது.

அந்தவகையில் கர்நாடக மாநிலம், பெங்களூரிலுள்ள ஒரு நிறுவனத்திடம், போக்குவரத்து கழக அதிகாரிகள், ஆறு மாதத்துக்கு முன், சில பழைய பஸ்களை ஒப்படைத்தனர். அதில் ஒரு பஸ் திருப்பதிக்கு அண்மையில் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், கடந்த இரண்டு நாள்களாக மலைப்பாதையில் இந்த பஸ் இயக்கி, சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. பஸ்ஸில் டீசல் தாங்கிற்கு பதிலாக, மின் பற்றிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனை இரண்டு மணி நேரம் 'சார்ஜ்' செய்தால், 160 கி.மீ பயணிக்க முடியும்.

இந்த பஸ் சோதனை ஓட்டம் வெற்றி பெற்றால், விரைவில் மலைப்பாதையில் இந்த பஸ்களை இயக்க, அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 85 லட்சம் கடந்தது!

இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 85 லட்சத்தைக் கடந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று ஒரே நாளில் 46 ஆயிரத்து 318 பேருக்கு கொரோனா உறுதியாகியுள்ளது. இதனால் நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 85 லட்சத்து 7 ஆயிரத்து 754ஆக அதிகரித் துள்ளது.

இதேபோல் கடந்த 24 மணித்தியாலங்களில் 559 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து, உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 121ஆக அதிகரித்துள்ளது.

இதேநேரம், ஒருநாளில் 49 ஆயிரத்து 82 பேர் குணமாகி வீடு திரும்பியமையால், குணமானோர் எண்ணிக்கை 78 இலட்சத்து 68 ஆயிரத்து 968ஆக உயர்ந்துள்ளது.

இதனையடுத்து கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி நாட்டில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 5 லட்சத்து 12 ஆயிரத்து 665 ஆக சரிந்துள்ளது.

அவர்களில் 8 ஆயிரத்து 944 பேரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. ஆலோசனைக் குழு உறுப்பினராக இந்திய தூதுவர் விதிஷா மைத்ரா நியமனம்



ஐக்கிய நாடுகள் சபையின ஆலோசனை குழு உறுப்பினராக இந்திய தூதுவர் விதிஷா மைத்ரா நியமிக்கப் பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில், 193 நாடுகள் உறுப்பினராக உள்ளன. இவை, ஐ.நா. நிர்வாகம் மற்றும் வரவு – செலவுத் திட்ட கேள்விகளுக்கான ஆலோசனைக் குழுவுக்கு, பிராந்தியம் மற்றும் தகுதி அடிப்படையில் 16 உறுப்பினர்களைத்தேர்வுசெய்கின்றன.

இக்குழுவின், 2021 – 2023ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் தேர்வு நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது. அதில், ஆசிய – பசுபிக் நாடுகள் பிரிவில், விதிஷா மைத்ரா தேர்வு செய்யப்பட்டார்.

இவருக்கு ஆதரவாக 126 வாக்குகள் கிடைத்தன. எதிர்த்துப் போட்டியிட்ட, ஈரான் பிரதிநிதி அலி முகமது பேக் அல் தபாக், 64 வாக்குகள் பெற்றார்.

இது தொடர்பாக ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர தூதுவர், டி.எஸ். திருமூர்த்தி கூறியுள்ளவை வருமாறு –

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தற்காலிக உறுப்பினராக, சமீபத்தில் இந்தியா தேர்வானது.

இதையடுத்து, ஐ.நா. நிர்வாகம் மற்றும் வரவு – செலவுத் திட்ட கேள்விகளுக்கான ஆலோசனைக் குழுவுக்கு, விதிஷா மைத்ரா தேர்வு செய்யப் பட்டுள்ளார்.

இது, இந்தியா மீது உறுப்பு நாடுகள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப் படுத்துகிறது. இதற்காக உறுப்பு நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இந்தியா உள்ளிட்ட 4 நாடுகளின் கூட்டு கடற்படைப் போர்ப் பயிற்சி!



இந்தியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நான்கு நாடுகளின் கூட்டு கடற்படைப் போர்ப் பயிற்சி கோவா கடற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டுக் கடற்படைப் போர்ப் பயிற்சி எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் நடைபெறவுள்ளன.

இதில் இந்தியா சார்பில் மிக் போர் விமானங்களைக் கொண்ட விக்ரமாதித்யா விமானந்தாங்கிக் கப்பல் பங்கேற்க உள்ளது.

அதேபோன்று அமெரிக்கக் கடற்படையில் எப் 18 வகைப் போர் விமானங்களைக் கொண்ட நிமிட்ஸ் விமானந்தாங்கிக் கப்பல் பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை


மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1988.06.07
மதம் – இந்து A– ஆசாரி
நட்சத்திரம் – பூரட்டாதி 3
பாவம் – 87
சூரி/ செவ் – 8 இல் 32 புள்ளி
கல்வி – A/L
தொழில் – P.HL
எதிர்பார்ப்பு – படித்த அழகான உத்தியோகப் பெண்.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1994.05.14
மதம் – இந்து V
நட்சத்திரம் – திருவாதிரை
பாவம் – 5 3/4
சூரி/ செவ் – 6 இல்
கல்வி – கனடா பட்டதாரி
தொழில் – கனடா PR
எதிர்பார்ப்பு–பட்டதாரிதேவை. இலங்கையிலும் பட்டதாரி எடுக்கலாம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு.
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# ஜோ பைடனுக்கும் கமலா ஹரிஸ்க்கும் அற்புதமான வெற்றி என மோடி வாழ்த்து



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் வெற்றிபெற்றமையையடுத்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, தனது ருவிட்டர் பதிவில் கருத்துத் தெரிவித்துள்ள அவர் –

உங்கள் வெற்றி அற்புதமானது இந்தோ – அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவதில் உங்கள் பங்களிப்பு முக்கியமானதாகவும் விலைமதிப்பற்றதாகவும் இருந்தது.

இந்தியா – அமெரிக்க உறவுகளை அதிக உயரத்திற்கு கொண்டுசெல்ல மீண்டும் ஒரு முறை நெருக்கமாகப் பணியாற்ற நான் எதிர்பார்க்கிறேன்'.– எனத் தெரிவித்துள்ளார்,

# கேரளா ஆளுநருக்கு கொரோனா தொற்று!



கேரள ஆளுநர் ஆரீப் முகம்மது கானுக்கு கொரோனா வைரஸ்தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளதாக அவர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தன்னுடன் தொடர்பிலிருந்த அனைவரையும் கொரோனா பரிசோதனை செய்துகொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, கேரளாவில் 83 ஆயிரத்து 324 பேர் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெறும் நிலையில், மூன்று லட்சத்து 88 ஆயிரத்து 504 பேர் இதுவரை குணமாகியுள்ளனர்.

அத்துடன், ஆயிரத்து 640 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரிசோனா வாக்குகள் எண்ணிக்கையை எதிர்த்து ட்ரம்ப் ஆதரவாளர் போராட்டம்



மரிகோபா கவுண்டி தேர்தல் திணைக் களத்துக்கு வெளியே, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக நான்கா வது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வர்கள் ஜனநாயகக் கட்சி தேர்தலைத் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் முன்னரே அரிசோனாவில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தின் முன் கூடி போராட் டத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.

வாக்குகளை எண்ணுங்கள், வாக்கு எண்ணிக்கை பாதியில் கைவிடப்படுவ தாகவும், இந்த தேர்தல் நியாயமற்றது எனக் கோஷமிட்டு போராட்டத்தில் அவர் கள் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது தேர்தல் முடிவுகள் வெளியாகி ஜோ பைடன் வெற்றி பெற்றுள்ள நிலையிலும் தொடர்ந்தும் போராட்டம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு தேசமாக ஒன்றுபடுங்கள்!

## ஜோ பைடன் அழைப்பு



ஒன்றுபட்ட அமெரிக்காவை உருவாக்குவதற்கான தருணம் இதுவென அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜன நாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் நேற்று மாலை ஜோ பைடனின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர் –

தேர்தல் பிரசாரங்கள் முடிந்து விட்டன. கோபங்களையும் கடுமை யான விமர்சனங்களையும் புறந் தள்ளிவிட்டு ஒரு தேசமாக ஒன்று படுங்கள் என அழைப்பு விடுத் துள்ளார்

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜோ பைடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப் பேற்கவுள்ளார்.

மேலும் அமெரிக்காவின் முதல் பெண் உப ஜனாதிபதியாக கமலா ஹரிஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து அமெரிக்கர்களும் எனக்கு ஒன்றே ஜோ பைடன் நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பு!

அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் தெரிவாகியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு 270 இடங்கள் தேவை என்ற நிலையில் ஜோ பைடன் உத்தியோகபூர்வ தகவல்களின்படி இது வரை 279 இடங்களில் வெற்றிபெற்று 46ஆவது ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

இந்நிலையில் இந்த வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், 'அமெரிக்கா, என்ற பெரிய நாட்டை வழிநடத்த நீங்கள் என்னைத் தேர்ந் தெடுத்தமைக்கு நான் பெருமைப்படுகிறேன்.

எங்களுக்கு முன்னால் கடினமான வேலைகள் இருக்கின்றன. நீங்கள் எனக்கு வாக்களித்தா லும் இல்லாவிட்டாலும் நான் அனைத்து அமெ ரிக்கர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஜனாதிபதியாக இருப்பேன்.

நீங்கள் என்னிடம் வைத்திருக்கும் நம்பிக் கைக்கு பாத்திரமாக இருப்பேன்.'- எனத் தெரிவித் துள்ளார்.

## கொரோனா பெருந்தொற்று:

## உலகளவிலான பாதிப்பு ஐந்து கோடியை கடந்தது!

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் உலக அளவிலான பாதிப்பு ஐந்து கோடி யைக் கடந்துள்ளது.

இதன்படி, இதுவரையான காலப்பகுதி யில் மொத்தமாக ஐந்து கோடியே 68 ஆயிரத்து 493 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமை பதிவாகியுள்ளது.

இதேவேளை, இதுவரை கொரோனா தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் மொத்த எண்ணிக்கை 12 லட்சத்து 54 ஆயி ரத்து 411 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா பாதிப்பு கண் டறியப்பட்ட ஐந்து கோடி பேரில் இதுவரை மூன்று கோடியே 54 லட்சத்து 80 ஆயிரத்து 358 பேர் தொற்றிலிருந்து மீண்டுள்ளனர்.

இந்நிலையில், இன்னும், ஒரு கோடியே 33 லட்சத்து 33 ஆயிரத்து 720 பேர் தற் போது வரையான நிலைவரப்படி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, தற்போது உலக அளவில் கொரோனா பாதிப்பு ஒரு நாளில் ஆறு லட்சத்தைத் தாண்டி பதிவாகின்றமையால் பாதிப்பு எண்ணிக்கை அதிவேகமாக அதி கரித்து வருகின்றது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளதுடன் அங்கு பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்துள்ளது. அங்கு இது வரை இரண்டு லட்சத்து 43 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மரணித்துள்ளனர்.

இதையடுத்து, இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளமையுடன் அங்கு இதுவரை 85 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத் துடன் ஒரு லட்சத்து 26 ஆயிரம் பேர் மர ணித்துள்ளனர்.

மூன்றாவது நாடான பிரேஸிலில் 56 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் இதுவரை ஒரு லட்சத்து 62 ஆயிரம் பேர் மரணித்துள்ளனர்.

இதையடுத்து, ரஷ்யா, பிரான்ஸ், ஸ்பெ யின், ஆர்ஜென்ரீனா, பிரித்தானியா, கொலம்பியா, மெக்ஸிகோ, பெரு, இத்தாலி ஆகியன நாடுகள் அடுத்தடுத்து பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்ட நாடுகளாக உள்ளன.

# முதல் பெண் துணை ஜனாதிபதி பெருமைக்குரியவர் கமலா ஹரிஸ்!




## அமெரிக்காவின் வரலாற்றில்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் வெற்றி பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்.

அத்துடன், ஜனநாயகக் கட்சியின் துணை ஜனாதிபதி வேட்பாளராக பதவியேற்கவுள்ளார் முதல் கறுப்பின மற்றும் தெற்காசிய பெண் மணியான கமலா ஹரிஸ். மேலும், அமெரிக் காவின் முதல் பெண் துணை ஜனாதிபதியாகவும் இவர் பெருமை பெறுகிறார்.

ஏற்கனவே, கமலா ஹரிஸ் கலிபோர்னியாவில் செனட்டராகப் பணியாற்றியிருந்தார் என்பதுடன் இவர் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியானது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இந்த வெற்றி தொடர்பாக அவர் டுவிற்றர் பதிவில் குறிப்பிடுகையில், 'அமெ ரிக்கத் தேர்தல் அமெரிக்காவின் ஆன்மா மற் றும் அதற்காகப் போராடும் எங்கள் விருப்பம் பற்றியது' என கமலா ஹரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 'எங்களுக்கு முன்னால் நிறைய வேலைகள் உள்ளன. தொடங்குவோம்' என்று தெரிவித்துள்ளார்.

## தொலைக்காட்சி முன்னாள் தொகுப்பாளர் காபூல் குண்டு வெடிப்பில் பலியாகினார்!

ஆப்கானிஸ்தானின் காபூலில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பிரபல தொலைக்காட்சியின் முன் னாள் தொகுப்பாளரும் மேலும் இரண்டு பேரும் கொல்லப்பட் டுள்ளனர்.

தொலைக்காட்சி தொகுப்பா ளரான யமா சியாவா இல்லத் துக்கு அருகே, அவரது வாக னத்துடன் இணைக்கப்பட்ட வெடிகுண்டே வெடித்துள்ளதாக பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அண்மையில், ஆப்கானிஸ் தானின் மத்திய வங்கியில் ஆலோசகராக சேர்ந்த சியாவர், நாட்டின் மிகப்பெரிய தனியார் தொலைக்காட்சியான டோலோ நியூஸில் முக்கிய அரசியல் மற்றும் நடப்பு விவகார தொகுப் பாளராக இருந்துள்ளார்.

இந்நிலையில், இவர் மீதான தாக்குதலுக்கு எந்தவொரு குழுவும் இதுவரை பொறுப் பேற்கவில்லை.

எனினும், நாட்டில் அதிக ரித்து வரும் வன்முறைகளுக்கு மத்தியில் காபூல் மற்றும் பிற நகரங்களில் இலக்கு வைக் கப்பட்ட தாக்குதல்களில் ஊடக வியலாளர்கள், மதத் தலை வர்கள், அரசியல்வாதிகள் மற் றும் உரிமை ஆர்வலர்கள் உட் படப் பல முக்கியஸ்தர்கள் கொல் லப்பட்டுள்ளனர். இதேவேளை, சியாவா கொல்லப்பட்டமைக்கு ஆப்கானிய மூத்த அதிகாரி கள் கடும் கண்டனத்தைத் தெரி வித்துள்ளனர்.

# உலக அரங்கில் தனித்துவமான உறவுகளுடன் நாம் பயணிப்போம்!

## பைடன், கமலாவுக்கு கனடா பிரதமர் வாழ்த்து



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஜோ பைடன் மற்றும் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள கமலா ஹரிஸ் ஆகியோருக்கு பல்வேறு நாடுகளின் தலைவர் கள் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், ஜோ பைடன் மற்றும் கமலா ஹரிஸிற்கு வாழ்த்துக்கள் என கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், தங்கள் இரு நாடுகளும் நெருங்கிய நண்பர்கள், கூட்டாளர்கள் மற்றும் கூட்டாளிகள் எனட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், 'உலக அரங்கில் தனித்துவமான ஓர் உறவை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம். உங்கள் இருவருடனும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கும் ஒற்றுமையை உரு வாக்குவதற்கும் நான் மிகவும் ஆவலுடன் இருக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

